DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 34/2019
Deposition of PW3/ LW10

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ராமசாமி |
| Father's / Husband Name | : | அருணச்சலம் |
| Village | : | கடமலைகுண்டு |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | சார்பு ஆய்வாளர் |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.11.2025

**எதிரிகள் A1 முதல் A4 ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

1) நான் மயிலாடும்பாறை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.11.2018 தேதி 13.45 மணிக்கு வருசநாடு காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. இளங்கோவன் க.விலக்கு மருத்துவமனையில் கிடைத்த தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த மணிகண்டன் என்வரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து வருசநாடு காவல் நிலைய குற்ற எண் 276/2018 பிரிவு 294(b),323,324,506(1) ஆக பதிவு செய்திருந்த வழக்கை முதல் தகவல் அறிக்கை பெற்று எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 14.30 மணிக்கு சாட்சிகள் ராஜபாண்டி மற்றும் கவிஈஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2,** பார்வை மகஜர் **அ.சா.ஆ.3**, வரைபடம் **அ.சா.ஆ.4.**

2)அதன் பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் 1) மணிகண்டன், 2) கௌரி, 3) கவிஅரசன் 4) ராசேஸ்வரன், 5) தனசேகரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின் இவ்வழக்கின் எதிரி A1 உதயசூரியன் (வயது 46) என்பவரை 15.30 மணிக்கு வருசநாடு சிங்கராஜபுரம் பிரிவு அருகே வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். மற்ற எதிரிகள்

முன்பிணையில் சென்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மோகனபிரியா அவர்களை விசாரித்து காயச்சான்று கிடைக்கப்பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். **அ.சா.1 யின் காயச்சான்று அ.சா.ஆ 5** . முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் இளங்கோவன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேலும் இவ்வழக்கின் விசாரணை முடித்து 01.12.2018 தேதி இவ்வழக்கின் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

வாதியிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு எதிரிகளின் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் குறித்த சாட்சிகளின் முன்னிலையில் கைது செய்யாமல் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து கைது செய்யததாக சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல , சொன்ன நேரத்தில் , சொன்ன இடத்தில் , சொன்ன சாட்சிகளின் முன்பு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னாலும் , அவை வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல . நான் சொல்வது போல , சொன்ன நேரத்தில் , சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல .

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.11.12 16:27:16 +0530

Judicial Magistrate,
Andipatti.